# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2023 – 2024

## வளர்தமிழ் 9

TEDC

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

TEDC

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழர் பண்பாட்டுக் கழகம் என்ற அமைப்பைத் தோற்றுவித்தவர்

அ) திருவள்ளுவர் ☐ ஆ) தனிநாயகம் அடிகள் ☐

இ) உருத்திரமூர்த்தி ☐ ஈ) பாவேந்தர் ☐

2. கூலவகைப் பயிர்களில் ஒன்று

அ) கத்தரி ☐ ஆ) வெண்டை ☐

இ) பாகல் ☐ ஈ) நெல் ☐

3. கூரிருள் கழிந்தது; கோழிகள் கூவின. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள உரிச்சொல்

அ) இருள் ☐ ஆ) கூர் ☐

இ) கழிந்தது ☐ ஈ) கூவின ☐

4. ______________ முகில்கள் அற்று வெட்டவெளியாகக் காட்சி அளித்தது.

அ) நிலம் ☐ ஆ) வானம் ☐

இ) கடல் ☐ ஈ) ஆறு ☐

5. கருமை, வட்டம் என்பன

அ) தொழிற்பெயர் ☐ ஆ) இடப்பெயர் ☐

இ) குணப்பெயர் ☐ ஈ) காலப்பெயர் ☐

TEDC

6. “நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே” என்று கூறியவர்

அ) பரணர் ☐ ஆ) கபிலர் ☐

இ) நக்கீரர் ☐ ஈ) கம்பர் ☐

7. இராவணனால் ஆளப்பட்ட இலங்கை நகரைச் சிங்கள அரசு சிறிலங்கா என மாற்றிய நூற்றாண்டு

அ) 18 ☐ ஆ) 16 ☐

இ) 19 ☐ ஈ) 20 ☐

8. திணை, பால், எண், இடம் என்பவற்றைக் காட்டுவது

அ) சந்தி ☐ ஆ) பகுதி ☐

இ) விகுதி ☐ ஈ) இடைநிலை ☐

9. களிப்பு என்பதன் பொருள்

அ) சினம் ☐ ஆ) ஐயம் ☐

இ) அழுகை ☐ ஈ) மகிழ்ச்சி ☐

10. மகாவம்சத்திற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்

அ) குடும்பவிளக்கு ☐ ஆ) மணிமேகலை ☐

இ) யாழ்நூல் ☐ ஈ) இருண்டவீடு ☐

11. 1979 ஆம் ஆண்டு அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் ________________ அகழ்வாய்வுகளை மேற்கொண்டது.

அ) ஆனைக்கோட்டையில் ☐ ஆ) கந்தரோடையில் ☐

இ) பூநகரியில் ☐ ஈ) மன்னாரில் ☐

TEDC

12. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் வாழ்ந்ததற்கான சான்று

அ) கல்வெட்டுகள் ☐ ஆ) கல்மேசைகள் ☐

இ) நாணயங்கள் ☐ ஈ) கல்லறைகள் ☐

13. பளிங்குமனம் என்பது

அ) உருவகஅணி

ஆ) உவமைஅணி

இ) தற்குறிப்பேற்றஅணி

ஈ ) உயர்வுநவிற்சிஅணி

14. ஆனிரைகளைக் காட்டுப் புல்வெளிகளில் மேய்த்தனர். இதில் புல்வெளி என்பது

அ) தோன்றற்புணர்ச்சி

ஆ) இயல்புப்புணர்ச்சி

இ) திரிதற்புணர்ச்சி

ஈ ) கெடுதற்புணர்ச்சி

15. தனிநாயகம் அடிகளார் வெளியிட்ட ஆங்கில சிற்றிதழ்களில் ஒன்று

அ) தமிழ்ப்பண்பாடு

ஆ) அகரமுதலி

இ) சதுரகராதி

ஈ ) வடமொழிவரலாறு

16. பின்வருவனவற்றுள் நிகழ்கால இடைநிலைகள்

அ) ப்,வ்

ஆ) வ்,கிறு

இ) த்,ட்

ஈ ) கின்று,கிறு

17. முன்னிலை ஒருமைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) வந்தேன்

ஆ) வந்தோம்

இ) வந்தனர்

ஈ ) வந்தாய்

TEDC

18. சிறுவனின் அறிவுத்திறமையை ஊர் பாராட்டியது. என்பது

அ) இடவாகுபெயர்

ஆ) சினையாகுபெயர்

இ) தொழிலாகுபெயர்

ஈ ) பொருளாகுபெயர்

19. பகாச்சொல்லிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அன்பன் ☐ ஆ) கூத்தர் ☐

இ) சிலை ☐ ஈ) வலைஞர் ☐

20. தமிழ் + இலக்கணம்

அ) தமிழ்இலக்கணம் ☐ ஆ) தமிழ்ழிலக்கணம் ☐

இ) தமிழ்லக்கணம் ☐ ஈ) தமிழிலக்கணம் ☐

21. மகாவம்சம் சுட்டெரிக்கப்பட வேண்டிய நூல் என்று கூறியவர்

அ) லயனல்சரத் ☐ ஆ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ☐

இ) வொன்றிபேக் ☐ ஈ) அல்மெய்டா ☐

22. நாகரின் அரசு இருந்த இடம்

அ) புத்தளம் ☐ ஆ) கல்யாணி ☐

இ) நாகதீபம் ☐ ஈ) கொழும்பு ☐

23. பின்வருவனவற்றுள் மெய்யெழுத்து அல்லாதது

அ) ட் ☐ ஆ) ஞ் ☐

இ) கெ ☐ ஈ) ண் ☐

24. தனிநாயகம் அடிகளார் தோன்றிய ஆண்டு

அ) 1913 ☐ ஆ) 1912 ☐

இ) 1916 ☐ ஈ) 1910 ☐

TEDC

25. உயிர்முன்உயிர் புணர்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தமிழ்மொழி ☐ ஆ) கவியழகு ☐

இ) நூலகம் ☐ ஈ) திருத்தலம் ☐

26. எடுத்தனர் என்பதன் வினையடி

அ) எடுத்த ☐ ஆ) அர் ☐

இ) த் ☐ ஈ) எடு ☐

27. சீரும்சிறப்பும் என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) இணைமொழி ☐

இ) தொடர்மொழி ☐ ஈ) அடுக்குத்தொடர் ☐

28. கடற்றொழிலாளரை ________________ என அழைப்பர்.

அ) இடையர் ☐ ஆ) உழவர் ☐

இ) மீனவர் ☐ ஈ) குயவர் ☐

29. உயிர்மெய்யெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 18 ☐ ஆ) 216 ☐

இ) 12 ☐ ஈ) 247 ☐

30. மாவீரர் நாளுக்கு வருவேன் என்று என் நண்பன் கூறினான். இச்சொல்லியம்

அ) கூட்டுச்சொல்லியம் ☐ ஆ) தனிச்சொல்லியம் ☐

இ) கலப்புச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

TEDC

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

எம்மைச் சுற்றிப் பலர் இருந்தாலும் நாம் எல்லோரையும் நண்பர்களாக ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு சிலரைத்தான் நண்பர்களாக ஏற்றுக்கொள்கிறோம். அவர்களிடம் மட்டுமே நாம் எல்லாவற்றையும் மனம் விட்டுக் கதைக்கின்றோம். நாம் ஒரு முறை ஒருவரோடு நட்புக் கொண்டால் அவரை விட்டுப் பிரிதல் என்பது கூடாது. நண்பர்களிடம் எந்தக் குறையைக் கண்டாலும் அவர்களிடமிருந்து பிரிவதைத் தவிர்த்து அவர்களைத் திருத்தி நல்வழியில் கொண்டு செல்ல வேண்டும். இதுவே நட்பிற்குச் சிறப்பு. நண்பன் வழி தவறும்போது அன்புடன் இடித்துரைத்து நல்வழிக்குக் கொண்டு செல்வதே நல்ல நட்பிற்கு இலக்கணமாகும். நட்பு என்னும் சொல் நேயம் அல்லது தோழமை எனப்பொருள்படும். திருக்குறளில் வள்ளுவர் நட்பைப்பற்றி ஐந்து அதிகாரங்களை எழுதிப் பெருமை சேர்த்துள்ளார். கழககாலத்திலிருந்தே நட்பின் பெருமையை நாம் அறியமுடிகிறது. அதியர்மானுக்கும் ஔவையாருக்கும், கோப்பெருஞ்சோழனுக்கும் பிசிராந்தையாருக்கும் இருந்த ஆழமான நட்புப் பற்றி அறிந்திருக்கிறோம்.

1. நல்ல நட்பிற்கு இலக்கணம் எது?

____________________________________________

____________________________________________

2. நட்பு என்னும் சொல்லின் பொருள் யாது?

____________________________________________

3. கோப்பெருஞ்சோழனுடன் ஆழமான நட்புக் கொண்டவர் யார்?

____________________________________________

4. கழககாலத்திலிருந்தே எதன் பெருமையை நாம் அறிய முடிகிறது?

____________________________________________

5. வள்ளுவர் நட்புப்பற்றி எத்தனை அதிகாரங்களை எழுதியுள்ளார்?

____________________________________________

புள்ளிகள் 10

TEDC

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இலங்கையில் உள்ள மிகப்பெரிய தாழிக்காடு எது?

____________________

2. பெருங்கற்கால மக்களின் தொழில்கள் இரண்டு தருக.

____________________

3. ''பால்கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்'' என்ற பாடல் வரி இடம்பெற்ற நூல் எது?

____________________

4. விசயன் இலங்கைக்கு வருமுன்னரே அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள் யாவர்?

____________________

5. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற இடங்களில் இரண்டைத் தருக.

____________________

6. நெல்லுப்பொதி சுமந்து கூத்தாடும் பயிர் எதற்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளது?

____________________

7. வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்?

____________________

____________________

TEDC

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து, கவிதையை முழுமையாக்குக.**

## தமிழ்மொழி

| | | | | |
|---|---|---|---|---|
| வரலாறு | மொழிகள் | வளர்த்த | தொல்காப்பியமும் | கலந்த |

உலக மொழிகளின் தாயாம்
முக்கழகம் ________________ மொழியாம்
தேனினும் இனிய மொழியாம்
எம் தெவிட்டாத செந்தமிழ் மொழி!

உயிருடன் ________________ தாய்மொழியே
பல ________________ கண்டவள் நீ
இலக்கணத்துக்கு ஒரு ________________
இலக்கியத்துக்கு இலக்கியமும் கொடுத்தவள் நீ

எத்தனை ________________ இருந்தாலும்
எத்துணையும் இல்லாமல்
வீறு நடை போடும் மொழி
எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழி

புள்ளிகள் 05

TEDC

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

அது ஓர் நீர்வளம் மிகுந்த சிறிய நாடு. அங்கே அழகான குளங்கள், குளத்தில் தாமரையும் அல்லியும் அழகாகப் பூத்திருந்தன. அருகே உள்ள மரங்களில் நறுமணம் வீசும் மலர்களும் மலர்ந்திருந்தன. மலர்களைச் சுற்றி, தேன் குடிக்க வண்டுகளும் தும்பிகளும் முரல்கின்றன. மனதை மயக்கும் நறுமணத்துடன் தென்றல் வீசியது. மாலை மயங்கும் வேளையில் குளங்கள் செக்கச்செவேலென நிறம் மாறுகின்றன. அதைக் கண்ட புள்ளினங்கள் நீரில் தீப்பற்றிக் கொண்டதென எண்ணித் தமது குஞ்சுகளைச் சிறகால் அணைக்கின்றன.

1. அஃறிணைப் பன்மைச் சொற்கள் இரண்டு தருக.

_______________________________________________

2. அடுக்கிடுக்குத்தொடர் ஒன்று எழுதுக.

_______________________________________________

3. நிகழ்கால வினைச்சொற்கள் இரண்டு தருக.

_______________________________________________

4. சுட்டுச்சொல் ஒன்று தருக.

_______________________________________________

TEDC

5. மூன்றாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் எது?

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. பின்வரும் சொற்களின் பகுதி,விகுதிகளைத் தருக.**

| **சொற்கள்** | **பகுதி** | **விகுதி** |
|---|---|---|
| வந்தோம் | | |
| பெறுநர் | | |
| கூறினான் | | |

புள்ளிகள் 03

**2. பின்வரும் புணர்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

மெய்முன்உயிர் ______________________________

மெய்முன்மெய் ______________________________

புள்ளிகள் 02

TEDC

## 6) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏறி | அலகு | பலம் | ஏரி | அழகு | பழம் |

ஒரு மலை அடிவாரத்தின் அடியில் இருக்கும் குகையில் ____________ வாய்ந்த புலி ஒன்று வாழ்ந்து வந்தது. அருகே பழங்கள் நிறைந்த மரங்கள் காணப்பட்டன. அம்மரங்களில் மயில்கள் ____________ நின்றன. அதனருகே ____________ ஒன்றும் காணப்பட்டது. அங்கு ____________ நிறைந்த இறகுகளையுடைய பறவைகள் காணப்பட்டன. அவற்றுள் கூரிய ____________ உடைய மீன்கொத்திப் பறவைகள் மீன்களைக் கொத்திக் கொத்தித் தின்று கொண்டிருந்தன .

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

நாம் எமது தாய்நாட்டை மறக்கக்கூடாது. நாம் எமது தாய்நாட்டைப் பற்றி அறிந்திருக்க வேண்டும். அங்குதான் எமது தாய், தந்தையர் பிறந்தார்கள். நாம் வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தமிழில் பேசிப்பழக வேண்டும். நாம் தாய்மொழி தமிழைக் கற்க வேண்டும். அத்துடன் எமது பண்பாட்டையும் பேண வேண்டும். அப்போதுதான் நாம் தமிழராய் வாழ முடியும்.

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

புள்ளிகள் 05

TEDC

**8) பழமொழிகளுக்குப் பொருத்தமான சொற்களை வைத்து நிறைவு செய்க.**

1. தாயும் பிள்ளையுமானாலும் ____________________ வயிறும் வேறு.

2. குற்றம் பார்க்கிற் சுற்றம் ____________________ .

3. ஒரு காசு ____________________ இருகாசு தேறும்.

4. துள்ளின மாடு ____________________ சுமக்கும்.

5. வல்லவனுக்குப் புல்லும் ____________________ .

புள்ளிகள் 05

TEDC

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தனிநாயகம் அடிகள்
- ✸ மீண்டும் தொடங்கும் மிடுக்கு
- ✸ கணினியும் அதன் பயன்பாடுகளும்
- ✸ மழைநாள்

| புள்ளிகள் 15 |
|---|

TEDC

TEDC